தமிழ் இலக்கியத் தோட்டம்
**Tamil Literary Garden**

# இயல் விருது விழா 2022

Lifetime Achievement Award Ceremony 2022

June 4, 2023

The Estate Banquet and Event Centre, Toronto, Canada

## தமிழ் இலக்கியத் தோட்டம் - Tamil Literary Garden

கனேடிய தமிழ் இலக்கியத் தோட்டம், கல்வியாளர்கள், எழுத்தாளர்கள், வாசகர்கள், விமர்சகர்கள், கொடையாளர்கள் ஆகியவர்களின் ஆதரவுடன் 2001ம் ஆண்டு ரொறொன்ரோவில், உலகமெங்கும் பரந்திருக்கும் தமிழை வளர்ப்பதற்காக ஆரம்பிக்கப்பட்ட அறக்கட்டளையாகும். அரிய தமிழ் நூல்களை மீள் பதிப்பு செய்வது, தமிழ், ஆங்கில நூல்களின் மொழிபெயர்ப்பை ஊக்குவிப்பது, மாணவர் கல்விக்கு புலமைப் பரிசில் வழங்குவது, தமிழ் பட்டறைகள் ஒழுங்கு செய்வது, கனேடிய நூலகங்களுக்கு இலவசமாக தமிழ் நூல்கள் அளிப்பது போன்ற சேவைகள் இதனுள் அடங்கும். இந்த இயக்கத்தின் முக்கியமான பணி வருடா வருடம் உலகத்தின் மேன்மையான தமிழ் இலக்கிய சேவையாளர் ஒருத்தருக்கு வாழ்நாள் தமிழ் இலக்கிய சாதனை விருது வழங்கிக் கௌரவிப்பதாகும். இயல் விருது என்றழைக்கப்படும் இந்த விருது, பாராட்டுக் கேடயமும் 2500 டொலர்கள் பணப்பரிசும் கொண்டது.

புனைவு, அபுனைவு, கவிதை, தமிழ் தகவல் தொழில் நுட்பம், மொழிபெயர்ப்பு ஆகிய துறைகளிலும் வருடா வருடம் பரிசுகள் வழங்கப்படுகின்றன.
பல்கலைக்கழகத்தில் தமிழ் கற்கும் சிறந்த மாணவருக்கு ஆயிரம் டொலர் புலமைப் பரிசிலும் உண்டு. வருடாவருடம் ரொறொன்ரோ பல்கலைக் கழகத்துடன் இணைந்து தமிழ் இலக்கியத் தோட்டம் தமிழ் அறிஞர்களின் விரிவுரைகளுக்கும் ஏற்பாடு செய்கிறது. அத்துடன் மறக்கப்பட்ட நிலையில் உள்ள நாட்டுக்கூத்து போன்ற கலைகளுக்கு புத்துயிரூட்டும் முயற்சியிலும் ஈடுபட்டு வருகிறது.

Founded in 2001, the Tamil Literary Garden is a Toronto based charitable organization committed to promoting the development of literature and studies in Tamil internationally. Its mandate includes awards, creative writing, scholarship to students, translations, book releases, Tamil theatre performances, conferences and workshops. It recognizes that despite the richness and significance of contemporary writing, very little has been done to promote or to celebrate the authors who have made major contributions to Tamil. Among its activities, the event that takes centre stage is a Lifetime Achievement Award, given annually to a writer, scholar, critic or editor, who over a period of time has made very significant contribution to the growth or study of Tamil literature. The Lifetime Achievement Award ( also known as Iyal Virudhu ) consists of a plaque and a cash prize of C$2500.

The Tamil Literary Garden also has instituted other awards: Awards for Fiction, Non-fiction, Poetry, Information Technology in Tamil, Translation and Scholarship to an undergraduate enrolled in a Tamil studies program. It also organizes Tamil Theatre performances (Naddu Koothu) and lecture series in conjunction with the Department of English - University of Toronto.

Tamil Literary Garden
76, Legacy Drive
Markham, ON L3S 4B5
Canada
Tel: 905 201 9547
Email:appatlg@gmail.com
Web: www.tamilliterarygarden.com

தமிழ் இலக்கியத் தோட்டம்
**Tamil Literary Garden**



Prof. Chelva Kanaganayakam
Past President



Dr Vijay Janakiraman
Patron



Prof. A. J. V. Chandrakanthan
Patron

## Board of Directors



Manuel Jesudasan
Barrister & Solicitor
President



Appadurai Muttulingam
Writer
Secretary



N.K. Mahalingam
Writer/ Translator
Treasurer



Selvam Arulanandam
Editor/ Writer
Director



Usha Mathivanan
Consultant
Director



Thirumurthi Ranganathan
(CEO, Digital Maxim)
Director



Sivan Ilangko, CPA, CA
Director



Raja Mahendran
Broker/ Owner Homelife GTA
Director



S.J. Ramprashan
Program Manager, CMR
Director

தமிழ் இலக்கியத் தோட்டம்
Tamil Literary Garden

## Advisory Board for Awards Panel

**Mu. Ponnambalam**
*Writer - Sri Lanka*
**Thamizhavan (Carlos Sabarimuthu)**
*Head, Department of Tamil, Dravidian University - India*
**V.N. Giritharan**
*Writer - Canada*
**R. Cheran**
*Assistant Professor, University of Windsor - Canada*
**A.R. Venkatachalapathy**
*Associate Professor, Madras Institute of Development Studies - India*
**V. Arasu**
*Head, Department of Tamil, University of Madras - India*
**Aravindan**
*Writer - India*
**P.A. Krishnan**
*Writer - India*
**Ambai (Dr C. S. Lakshmi)**
*Writer - India*
**Syed Peer Mohammed**
*Writer - Malaysia*
**Sitralega Maunaguru**
*Professor, Department of Tamil, Batticaloa Eastern University - Sri Lanka*
**M.A. Nuhman**
*Head, Department of Tamil, University of Peradeniya - Sri Lanka*
**George L. Hart**
*Head, Department of Tamil, University of California at Berkeley - USA*
**A. Muthukrishnan**
*Writer - India*
**Jayanthi Sankar**
*Writer - Singapore*
**P. Karunaharamoorthy**
*Writer - Germany*
**L.Murugapoopathy**
*Writer - Australia*
**P.Ahilan**
*Lecturer, University of Jaffna - Sri Lanka*
**Professor R. S. Sugirtharajah**
*University of Birmingham, U. K*
**M. Pushparajan**
*Writet, poet, U. K*
**A. Kanthasamy**
*Writer, Canada*
**Yuvan Chandrasekar**
*Writer – India*
**Gnanam Lambert**
*Director – Canada*
**P.Wickneswaran**
*Director – Canada*
**Maalan Narayanan**
*Editor/ Director - India*
**Sukumaran**
*Poet, India*

# இயல் விருது விழா 2022

## Lifetime Achievement Award Ceremony 2022

June 4, 2023



### Chief Guest

**Thomas Hitoshi Pruiksma** is an author, translator, teacher, and performer. His translation of the classical Tamil masterpiece on ethics, power, and love, The Kural: Tiruvalluvar's Tirukkural, was recently published by Beacon Press. Other books include The Safety of Edges (poems), Give, Eat, and Live: Poems of Avvaiyar (translated from the Tamil) and Body and Earth (with the artist C.F. John). He speaks and performs widely, teaches for the Cozy Grammar series of online video courses, and has received grants and fellowships from the National Endowment for the Arts, 4Culture, Artist Trust, and the U. S. Fulbright Program.

---



### Special Guest


**Kim Echlin** is an award-winning novelist, non-fiction writer, translator, and editor. She wrote the Giller short-listed novel, *The Disappeared*, which was translated into 20 languages. Her other fiction includes *Elephant Winter*, *Dagmar's Daughter*, *Under the Visible Life*, and most recently, *Speak, Silence* which won the City of Toronto Book Award.

She has worked around the world, was an arts producer at the CBC, has a PhD in English literature and teaches creative writing at the School of Continuing Studies, University of Toronto. She is currently completing an historical novel about the Mesopotamian poet, Enheduanna.

# AWARD RECIPIENTS FOR 2022

## Lifetime Achievement Award

Recipient:
**Paavannan**
இயல் விருது





Recipient:
**L Murugapoopathy**
இயல் விருது



### Fiction Award
Recipient: **Velmurugan Elango**
புனைவு: மன்னார் பொழுதுகள்



### Non-Fiction Award
Recipient: **Samraj**
அபுனைவு: மூவந்தியில் சூலுறும் மர்மம்



### Poetry Award
Recipient: **Sukirtharani**
கவிதை விருது: சுகிர்தராணி கவிதைகள்



### Vision of India Literature Award
Recipient: **Sivasankari**
இந்திய இலக்கிய தரிசன விருது:
இலக்கியம் மூலம் இந்திய இணைப்பு



### Special Recognition Award
Recipient: **V.N. Giritharan**
இலக்கிய சாதனை விருது



# இயல் விருது

## பாவண்ணன்

Lifetime Achievement Award
**Recipient: Paavannan**

எண்பதுகளில் எழுதத் தொடங்கிய எழுத்தாளர்களின் தலைமுறையைச் சேர்ந்தவர் பாவண்ணன். "தீபம்" என்னும் இதழில் வெளிவந்த முதல் சிறுகதையை தொடர்ந்து சிற்றிதழ்களிலும், பெரிய இதழ்களிலும் இவர் இன்றுவரை தொடர்ந்து எழுதுகிறார்.

தமிழ் சிறுகதைகளையும், தமிழில் வெளிவந்த பிறமொழிச் சிறுகதைகளையும் முன்வைத்து திண்ணை இணைய இதழில் 'எனக்குப் பிடித்த கதைகள்' என்னும் தலைப்பில் இவர் அந்தக் கதைகளில் காணப்பட்ட அழகியலையும் வாழ்வியலையும் இணைத்து புரிந்துகொள்ளும் விதமாக எழுதிய நூறு விமர்சனக் கட்டுரைகள் மிகப் பெரிய வாசக கவனத்தை பெற்றன.

ஐம்பது தமிழ்க் கவிஞர்களின் படைப்புகளை முன்வைத்து 'உயிரோசை' இணையதளத்தில் 'மனம் வரைந்த ஓவியம்' எனும் தலைப்பில் இவர் எழுதிய கட்டுரைகள் முக்கியமானவை. ரசனையை அடிப்படையாகக் கொண்டு இவர் எழுதிய பல இலக்கியக் கட்டுரைகள் இவரைத் தமிழ் அழகியல் விமர்சகர்களின் முன்வரிசையில் வைக்கத் தகுதியாக்கின.

பாவண்ணன் இவளவனூர் என்னும் சிற்றூரில் அக்டோபர் 20இல் 1958 அன்று பிறந்தார். பள்ளிக் கல்வியை வளவனூரிலும், புகுமுக வகுப்பை விழுப்புரம் அரசுக் கல்லூரியிலும், பட்டப்படிப்பை புதுச்சேரி தாகூர் கலைக் கல்லூரியிலும் படித்து தேறினார். கோட்டப் பொறியாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றவர்.

இவருடைய கவிதைத் தொகுதிகள் மூன்றும், சிறுகதைத் தொகுதிகள் 21ம், நாவல்கள் மூன்றும், குறுநாவல்கள் மூன்றும், கட்டுரைத் தொகுப்புகள் 34ம், சிறுவர் இலக்கியத் தொகுப்புகள் ஒன்பதும், மொழிபெயர்ப்புகள் (கன்னடத்திலிருந்து) 24 நூல்களும், (ஆங்கிலத்திலிருந்து) ஐந்து நூல்களும் இதுவரை வெளியாகியுள்ளன.

இவர் பெற்ற இலக்கிய விருதுகள்:

- புதுச்சேரி அரசு சிறந்த நாவல் விருது - 1987
- இலக்கியச் சிந்தனை சிறந்த நாவல் விருது - 1995.
- கதா அமைப்பு சிறந்த சிறுகதை விருது - 1995.
- சாகித்திய அகாதெமி
  சிறந்த மொழிபெர்ப்பு விருது - 2005
- தமிழக அரசு சிறந்த குழந்தை இலக்கிய விருது - 2009
- சுஜாதா-உயிர்மை அறக் கட்டளை
  சிறுகதை தொகுப்பு விருது - 2015
- என்.சி.பி.எச் சிறந்த கட்டுரைத் தொகுதி விருது - 2015
- இந்திய அமெரிக்க வாசகர்
  வாழ்நாள் சாதனை விருது - 2018
- விளக்கு அமைப்பு புதுமைப்பித்தன் விருது - 2019
- எம்.வி. வெங்கட்ராம் நூற்றாண்டு நினைவு விருது - 2021

இவருடைய இலக்கியப் படைப்புகள் சக எழுத்தாளர்களின் மதிப்பை பெற்றவை. முக்கியமாக இவருடைய மொழிபெயர்ப்புகள் தமிழ் இலக்கியத்தின் வளத்தை பெருக்கின. இவருடைய தமிழ் இலக்கியச் சாதனைகளைப் பாராட்டி 2022ம் ஆண்டுக்கான இயல் விருதை வழங்குவதில் தமிழ் இலக்கியத் தோட்டம் பெருமையடைகிறது.



# இயல் விருது

## லெட்சுமணன் முருகபூபதி

Lifetime Achievement Award
**Recipient: Letchumanan Murugapoopathy**

கடந்த ஐம்பது ஆண்டுகளாக தமிழ் இலக்கிய உலகில் தொடர்ந்து இயங்கிவரும் இலங்கையில் பிறந்த படைப்பிலக்கியவாதியும், ஊடகவியலாளருமான லெ. முருகபூபதி அவர்களுக்கு இவ்வருடம் இயல் விருது வழங்கப்படுகிறது.

1972இல் எழுத்தாளராக அறிமுகமான இவரின் முதலாவது சிறுகதைத் தொகுதிக்கு இலங்கை சாகித்திய மண்டல விருது கிடைத்தது. வீரகேசரி பத்திரிகை ஆசிரிய பீடத்தில் இவர் பணியாற்றியபோது சோவியத் ஒன்றியத்தின் அழைப்பில் உலக இளைஞர் மாணவர் விழாவில் கலந்துகொண்டார்.

1987இல் அவுஸ்திரேலியாவுக்கு புலம்பெயர்ந்த இவர், தொடர்ந்து சிறுகதை, கட்டுரை, பேட்டி, பயண இலக்கியம் என எழுதி வெளியிட்டு வருகிறார். அவுஸ்திரேலியாவில் தமிழ் எழுத்தாளர் விழாக்களை நடத்துவதில் முன்னின்று உழைத்துவரும் இவர், 2011இல் கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டின் பிரதம அமைப்பாளராக செயல்பட்டார். அவுஸ்திரேலியாவில் 1988ஆம் ஆண்டு முதல் இயங்கிவரும் இலங்கை மாணவர் கல்வி நிதியம், 2004ஆம் ஆண்டு முதல் இயங்கி வரும் தமிழ் இலக்கிய கலைச் சங்கம் ஆகியனவற்றின் ஆரம்ப உறுப்பினருமாவார்.

இலங்கையில் வடமேல் மாகாணத்தில் நீர்கொழும்பில் 13 யூலை 1951இல் பிறந்த முருகபூபதி, விவேகானந்த வித்தியாலயத்தில் (தற்போது விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரி) தமது ஆரம்பக் கல்வியை தொடங்கி பின்னர், யாழ்ப்பாணம் ஸ்ரான்லி கல்லூரியிலும், (தற்போது கனகரத்தினம் மத்திய கல்லூரி) நீர்கொழும்பு அல்கிலால் மகாவித்தியாலயத்திலும் கல்வி கற்றார்.

இவருடைய வாழ்வையும் பணிகளையும் சித்தரிக்கும் 'ரஸஞானி' என்ற ஆவணப்படத்தை 2017இல் மெல்பேர்ன் எழுத்தாளர் எஸ்.கிருஷ்ணமூர்த்தியும், வீடியோ கலைஞர் மூர்த்தியும் இணைந்து தயாரித்து வெளியிட்டனர்.

இவருடைய சிறுகதைத் தொகுதிகள் ஏழும், புதின, சிறுவர், பயண இலக்கியம் மூன்றும், கடித இலக்கியம், நேர்காணல் தொகுதி இரண்டும், கட்டுரைத் தொகுதிகள் பதினாறும் வெளிவந்துள்ளன.

இவர் பெற்ற இலக்கிய விருதுகள்:

- சுமையின் பங்காளிகள்
1975ஆம் ஆண்டு சிறந்த சிறுகதைத் தொகுதிக்கான இலங்கை அரசின் தேசிய சாகித்திய விருது.
- பறவைகள்
2002ஆம் ஆண்டு சிறந்த நாவலுக்கான இலங்கை அரசின் தேசிய சாகித்திய விருது.
- அக்கினிக் குஞ்சு இணைய இதழ் 2018இல் வழங்கிய வாழ்நாள் இலக்கிய சாதனையாளர் விருது.

இதர விருதுகள்:

2002ஆம் ஆண்டு அவுஸ்திரேலிய தினத்தின்போது விக்ரோரியா மாநில டெறபின்மா நகரசபை வழங்கிய சிறந்த பிரஜைக்கான விருது.

2011 ஆம் ஆண்டு விக்ரோரியா மாநில பல்தேசிய கலாசார ஆணையத்தின் விருது.

2022 Aust Tamil TV -(Tamil Linguistics Award ) விருது.

இவருடைய இலக்கிய, ஊடகத்துறை மற்றும் தன்னார்வத் தொண்டு சேவைகளைப் பாராட்டி 2022ஆம் ஆண்டுக்கான இயல் விருதை வழங்குவதில் கனடா தமிழ் இலக்கியத் தோட்டம் பெருமையடைகிறது.



## வேல்முருகன் இளங்கோ

புனைவுப் பரிசு
**மன்னார் பொழுதுகள்**

**Fiction Award Recipient: Velmurugan Elango**

நாவல் மூலம் முதன் முதலாக தமிழ் இலக்கியத்துக்கு அறிமுகமானவர் வேல்முருகன் இளங்கோ. திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி அருகில் உள்ள வடுவூர் இவரது பிறப்பிடம். இவர் வயது 31. பொறியியல் துறையில் பணியாற்றி வருகிறார்.

இவருடைய இரண்டாவது நாவலான 'மன்னார் பொழுதுகள்' இவரை வாசிப்போர் மனதில் ஓர் இளைய திறன்மிக்க படைப்பாளி தமிழுக்கு கிடைத்து விட்டார் என்ற எண்ணத்தை தோற்றுவிக்கிறது. பரந்த களமொன்றில் விரியும் இந்த நாவல், சதியால் சாய்க்கப்பட்ட விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன் மரணம் வரைக்கும் பேசுகிறது. ஊடாட்டமாகச் சமகால அரசியல் போக்குகளும் விவரிக்கப்படுகின்றன. இதையொரு அரசியல் நாவல், வரலாற்று நாவல் என்ற எல்லைகளுக்குள் நிறுத்த முடியாது. இது மத, இன, வர்க்க முரண்பாடுகள் சதிகள், வன்மங்கள் என அனைத்தையும் தொட்டு விரிந்து செல்லும் ஒரு சாகச நாவலின் அனுபவத்தை வாசகருக்கு தருகிறது. பிரதான கதை மாந்தரும், மற்றைய பாத்திரங்களும் ஈர்ப்புடனும், செறிவுடனும் படைக்கப்பட்டுள்ளனர்.
இரண்டாவது நாவலே ஆனாலும் ஆசிரியருக்கு புனைவுக்கான மொழியும், நடையும் கைவரப்பட்டிருக்கின்றன.

அறந்தாங்கி, தூத்துக்குடி, திருநெல்வேலி மொழி, நெய்தல் நிலத்து மொழி வழக்குகள் என ஆங்காங்கே திறனுடன் ஆளப்பட்டிருக்கின்றன. ஆசிரியர் தன் திறன் உரைத்து நில்லாமல் நாவலை வளர்த்துச் செல்வதில் முனைப்புடன் செயல்பட்டிருக்கிறார். சமீபத்தில் தமிழ் இலக்கியத்துக்கு கிடைத்த ஓர் இளைய திறன்மிக்க படைப்பாளி என்ற நம்பிக்கையை வேல்முருகன் இளங்கோ தருகிறார். எப்பகுதியிலும், எந்த உறவிலும் எச்சம்பவத்திலும் செயற்கைத்தனம் அற்ற, புனைவென்று உணராத விதத்தில் இவர் படைப்பு பேசுகிறது.

இவருடைய 'மன்னார் பொழுதுகள்' நாவலைப் பாராட்டி இவருக்கு 2022ம் வருடத்திற்கான புனைவுப் பரிசை தமிழ் இலக்கியத் தோட்டம் வழங்குவதில் பெருமையடைகிறது.

---



## சாம்ராஜ்

அபுனைவுப் பரிசு
**மூவந்தியில் சூலுறும் மர்மம்**

**Non- Fiction Award Recipient: Samraj**

தமிழில் கவிதைகள், கட்டுரைகள், சிறுகதைகள் மற்றும் சினிமா விமர்சனங்கள் என எழுதிவரும் முக்கிய படைப்பாளி சாம்ராஜ்.

உதவி இயக்குநராகப் பல படங்களில் பணியாற்றியுள்ளார். 'திருடன் மணியம்பிள்ளை' நூலை திரைப்படமாக்கும் முயற்சியில் இருக்கும் இவர் தற்போது இயக்குநர் மிஷ்கினுடன் பணியாற்றுகிறார். 'மூவந்தியில் சூலுறும் மர்மம்' நூல் 37 கட்டுரைகளையும், ஒரு நேர்காணலையும் அடக்கியது. அபாரமான ஒப்புமைகளின் வழியாக அழுத்தமான காட்சிப் படுத்தல்கள், வழிபாட்டுணர்வில் மங்கிவிடாத நீதியுணர்வு, உச்சங்களை மட்டுமே உரைத்துப் பார்த்தல், மறைந்து கிடக்கும் மாணிக்கங்களை தொட்டுக் காட்டல், இலக்கியவாதிகளிடம் துணிவாக அவர்கள் பொறுப்பை உணர்த்துதல், சூத்திரத்துக்குள் அடங்காத ஓட்டம் என்று முக்கியமான பல அம்சங்களுடன் இலகுவான மொழியில் களிநயமிக்க வழியில் இத் தொகுப்பின் கட்டுரைகளை சாம்ராஜ் எழுதிக் காட்டியிருக்கிறார்.

இவை போதாதென்று அவரது தீர்க்கமான சிந்தனைகள், பார்வைகள் பலவும் இக்கட்டுரைகளுக்கு வலுச் சேர்க்கின்றன. இடதுசாரிப் படைப்பாளர்கள் ஒன்று பிரச்சாரமாகவே தொடர்கின்றனர், அல்லது இலக்கியத்தை விட்டே விலகி வருகின்றனர் என்ற எடுத்துக்காட்டுகளுடன் தொடங்கி, அவ்விரு முனைகளுக்கும் நடுவே அழகியலுடன் பாலமிடும் படைப்பாளியை அடையாளம் காட்டி விளக்கும் ஒரு கட்டுரை சாம்ராஜின் இலக்கியத் திறனை மட்டுமன்றி இலக்கிய விமர்சனத்தின் இடத்தையும் காட்டுகிறது.

இதுவரை வெளிவந்த இவருடைய படைப்புகள்:

சிறுகதைத் தொகுப்புகள்
- பட்டாளத்து வீடு
- ஜார் ஒழிப்பு.

கட்டுரைத் தொகுப்புகள்
- நிலைக் கண்ணாடியுடன் பேசுபவன்
- மூவந்தியில் சூலுறும் மர்மம்

கவிதைத் தொகுப்பு
- என்றுதானே சொன்னார்கள்.

2013ம் ஆண்டு 'என்றுதானே சொன்னார்கள்' என்ற இவருடைய கவிதைத் தொகுப்பிற்கு ராஜமார்த்தாண்டன் விருது வழங்கப்பட்டது. சரோஜாவை மணமுடித்த இவர், மகன் ஆரண்யா, மகள் டெசா ஆகிய செல்வங்களுடன் சென்னை, பெசண்ட் நகரில் வசித்து வருகிறார்.

இவருடைய கட்டுரைத் தொகுப்பான 'மூவந்தியில் சூலுறும் மர்மம்' நூலுக்கு 2022ம் ஆண்டுக்கான அபுனைவுப் பரிசை வழங்குவதில் தமிழ் இலக்கியத் தோட்டம் பெருமையடைகிறது.



## சுகிர்தராணி

கவிதைப் பரிசு
**சுகிர்தராணி கவிதைகள்**

**Poetry Award**
**Recipient: Sukirtharani**

சுகிர்தராணி தொண்ணூறுகளின் பிற்பகுதியிலிருந்து எழுதிவரும் முக்கியமான கவிஞர்.

இவர் சாதி முறைமைக்கு எதிராகவும் ஒடுக்கப்பட்ட பெண்களுக்காகவும் தொடர்ந்து எழுதியும் செயல்பட்டும் வருபவர். சமூக ஆர்வலராகிய இவர் தலித் பெண்ணிய செயல்பாடுகளில் தொடர்ந்து இயங்கி வருபவர். பெண்கள் தம் அதிகாரத்தை வென்றெடுக்க உடலரசியலை ஒரு கூறாகப் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதை உரக்கச் சொல்லி வருபவர். இவர் உழைப்பைச் சுரண்டுதல், பாலியல் வன்முறை, ஆண் பெண் ஏற்றத்தாழ்வுகள், பாலினச் சமத்துவமின்மை எல்லாவற்றிற்கும் களமாக விளங்கும் பெண்ணுடல் விடுதலை பெறாமல் பெண் விடுதலை சாத்தியமில்லை என்பதை உறுதியாக நம்புபவர். பெண், விடுதலை அடையாமல் தலித் விடுதலை சாத்தியமில்லை என்பதை தன் கவிதைகளின் அடிநாதமாகக் கொண்டிருக்கும் சுகிர்தராணி, ஒரு தலித் கவிஞரும்கூட.

இவருடைய கவிதைத் தொகுப்புகள் 12 வெளிவந்திருக்கின்றன. கைப்பற்றி என் கனவு கேள், இரவு மிருகம், அவளை மொழிபெயர்த்தல், தீண்டப்படாத முத்தம், காமத்திப்பூ, இப்படிக்கு ஏவாள், சுகிர்தராணி கவிதைகள் மற்றும் நீர் வளர் ஆம்பல்.

இவர் 12 கவிதை விருதுகள் பெற்றிருக்கிறார். தேவமகள் கவித்தூவி விருது, பாவலர் எழுஞாயிறு விருது, சாதனைப் பெண் விருது, புதுமைப் பித்தன் நினைவு, அம்பேத்கர் பேரொளி விருது, The Vibrant Voice Of Subaltern 2018 Award, குத்தூசி குருசாமி நினைவு விருது, அன்னை மீனாம்பாள் சிவராஜ் விருது, அவ்வை விருது, எழுத்துச் செம்மல் விருது, சுந்தர ராமசாமி விருது, காரைக்கால் அம்மையார் விருது.

இவருடைய பிற சிறப்புகள் ஜேர்மனி, மலேசியா, கனடா, அமெரிக்கா, குவைத், இலங்கை ஆகிய நாடுகளில், கவிதை இலக்கிய அரங்குகளில் பங்குகொண்டது. பல கல்லூரிகளில் இவருடைய கவிதைகள் இலக்கியத் துறைகளில் பாடமாக வைக்கப்பட்டுள்ளன. பிற மொழிகளில் இவரது கவிதைகள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

காதல் என்பது ஒரு வர்த்தகப் பெயராக, பெண் உடல் என்பது ஒரு வணிகப் பொருளாக மாற்றப்பட்ட சூழலில் பெண் விடுதலை நோக்கி உறுதியுடன் முன்னேறும் சுகிர்தராணிக்கு 2022ம் ஆண்டுக்கான கவிதை விருதை அளிப்பதில் தமிழ் இலக்கியத் தோட்டம் பெருமையடைகிறது.

---



## சிவசங்கரி

இந்திய இலக்கிய தரிசன விருது
**இலக்கியம் மூலம் இந்திய இணைப்பு**

**Vision of Indian Literature Award**
**Recipient: Sivasankari**

திருமதி சிவசங்கரி தமிழில் மத்தியதர மக்களின் வாழ்க்கையை சிறுகதைகள், நாவல்கள், குறு நாவல்கள் என எழுதுவதில் புகழ் பெற்றவர். இவர் பல ஆராய்ச்சிகளை மேற்கொண்டு, உண்மையான விவரங்களோடு இவற்றைப் படைத்துள்ளார், அத்துடன் கட்டுரை, பயணக்கதை என்று தமிழ் இலக்கியத்தின் பல பிரிவுகளுக்கும் கடந்த 50 வருடங்களாகத் தரமான பங்களிப்பு செய்து வந்திருக்கிறார். எந்த எழுத்துமே ஆக்கபூர்வமாக இருக்கவேண்டுமேயன்றி, அழிவுப் பாதைக்கு அழைப்பதாக இருக்கக்கூடாது என்பதைத் தீவிரமாக இவர் கடைப்பிடிப்பவர்.

‘இலக்கியம் மூலம் இந்திய இணைப்பு’ என்ற திட்டத்தின் கீழ், 18 இந்திய மொழிகளைச் சார்ந்த நூறு முக்கிய எழுத்தாளர்களைச் சந்தித்துப் பேட்டியெடுத்துள்ளார். பேட்டிகளுடன் அவர்களது படைப்புக்களும், அந்தந்த மாநிலப் பயணக் கதைகளும், ஒவ்வொரு மொழியின் இலக்கியப் பின்னணி குறித்த விரிவான கட்டுரைகளும் நான்கு தொகுதிகளாக (தெற்கு, கிழக்கு, மேற்கு, வடக்கு)
தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளியாகியுள்ளன. தமிழுக்கு இவர் அளித்த முக்கிய கொடை இது என்று சொல்லலாம். சிவசங்கரியின் எழுத்துக்கள் என்ற தலைப்பில் ஐந்து பல்கலைக்கழகங்களின் எட்டு பேராசிரியர்கள் கலந்துகொண்ட இரண்டு நாள் கருத்தரங்கு ஒன்று, மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் நடத்தப்பட்டுள்ளதோடு, இதுவரை ஏறத்தாழ எண்பதுக்கும் மேற்பட்ட மாணவர்கள் தங்கள் எம்.ஃபில். மற்றும் பி.எச்.டி. படிப்புக்காக இவரது கதைகளை ஆய்வு செய்துள்ளனர். சிவசங்கரியின் பல படைப்புக்கள், கஸ்தூரி சீனிவாசன் விருது, ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் பரிசு, கல்கத்தாவின ‘பாரதீய பாஷாபரிஷத்’ பரிசு போன்ற இலக்கிய அங்கீகாரங்களைப் பெற்றுள்ளதோடு, ஃபெமீனா ஆங்கிலப் பத்திரிகையினால் 15.8.1997 சுதந்திரப் பொன் விழாவின் போது, ‘இந்தியாவை உருவாக்கிய ஐம்பது பெண்மணிகளுள் ஒருவர்’ எனவும், சர்வதேச மகளிர் சங்கத்தினால் 1999-ம் ஆண்டின் ‘சிறந்த பெண்மணி’ என்றும், 2006-ம் ஆண்டின் மிகச் சிறந்த எழுத்தாளராக ‘Z’ டி.வி.யின் ‘அஸ்தித்வா’ விருது பெற்றும் கௌரவிக்கப்பட்டுள்ளார்.
அமெரிக்க லைப்ரரி ஆஃப் காங்கிரசின் இருநூறாவது ஆண்டு விழா சந்தர்ப்பத்தில், அவர்களது ஆவணப் பெட்டகத்தில் இடம்பெறும் பொருட்டு தங்களது படைப்புகளை தங்களது சொந்தக் குரலில் பதிவு செய்த நான்கு எழுத்தாளர்களுள் சிவசங்கரியும் ஒருவர். அகில இந்திய வானொலி நிலையமும் இவரது வாழ்வைப் பற்றிய பேட்டியை தங்களது ஆவண நிகழ்வுக்காக பதிவு செய்துள்ளது.

இவரது அளப்பரிய தமிழ் சேவையைப் பாராட்டி தமிழ் இலக்கியத் தோட்டம் இவருக்கு இந்திய இலக்கிய தரிசன விருதை ‘இலக்கியம் மூலம் இந்திய இணைப்பு’ நூலுக்கு வழங்குவதில் பெருமைப்படுகிறது.



## வ.ந. கிரிதரன்

இலக்கிய சாதனை விருது

**Special Recognition Award Recipient: V.N. Giritharan**

வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணத்தில் பிறந்த எழுத்தாளர் வ.ந.கிரிதரன் தற்போது கனடாவில் வசித்து வருகின்றார். கட்டடக்கலைப் பட்டதாரியான இவர் ரொறொன்ரோ சென்டானியல் கல்லூரியில் இலத்திரனியல் பொறியியல் துறையிலும் தகவல் தொழில் நுட்பத் துறையிலும் பல்வேறு கல்வித் தகமைகளைப் பெற்றவர். ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம், நகர அதிகார சபை ஆகியவற்றில் பணியாற்றிய இவர் போர்ச் சூழல் காரணமாக கனடாவுக்கு புலம் பெயர்ந்தவர். இவரது படைப்புகள் இலங்கை, தமிழகம் மற்றும் புகலிடத் தமிழர்கள் வெளியிட்ட சஞ்சிகைகள், பத்திரிகைகளில் வெளியாகியுள்ளன. தமிழகப் பல்கலைக் கழகங்களில் இவரது படைப்புகளைப்பற்றி முனைவர் மற்றும், இளமுனைவர் பட்ட ஆய்வுகள் செய்யப்பட்டுள்ளன.

'பொந்துப் பறவைகள்' என்னும் சிறுகதை சிங்கப்பூர் கல்வி அமைச்சினால் தமிழ் மாணவர்களுக்கான பாடத்திட்டமொன்றில் உள்ளடக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. 'அமெரிக்கா' நூல் அமெரிக்கன் கல்லூரியின் (தமிழ்நாடு) பாடத்திட்டத்திலுள்ளது. ஆனந்த விகடனின் பவள விழாப் போட்டி, எழுத்தாளர் சுஜாதா அறக்கட்டளை மற்றும் ஆழி பப்ளிஷர்ஸ் இணைந்து நடாத்திய உலக அளவிலான அறிவியற் சிறுகதைப் போட்டி ஆகியவற்றில் பரிசுகளைப் பெற்றுள்ளன. மனோன்மணியம் மீனாட்சி சுந்தரனார் பல்கலைக் கழகத்தின் ஆங்கிலத் துறையில், முனைவர் பட்ட ஆய்வுக் கைநூலில் புகலிட நாவல்களில் படிக்க வேண்டிய நாவலாக இவரது An Immigrant (குடிவரவாளன்) நாவலின் ஆங்கில மொழிபெயர்ப்பு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

'பதிவுகள்' என்னும் இணைய இதழின் ஆசிரியராக 2000 ஆம் ஆண்டிலிருந்து செயலாற்றி வருகிறார். முனைவர் பட்ட ஆய்வாளர்கள், இளமுனைவர் பட்ட ஆய்வாளர்கள், பேராசிரியர்கள், உதவிப் பேராசிரியர்களின் ஆய்வுக் கட்டுரைகளை பிரசுரிக்கும் பன்னாட்டுத் தமிழ் ஆய்விதழாகவும் பதிவுகள் விளங்குகின்றது. இவர்களது 500ற்கும் அதிகமான ஆய்வுக் கட்டுரைகள் 'பதிவுகள்' இணைய இதழின் ஆய்வுப் பிரிவில் பிரசுரமாகியுள்ளன. பதிவுகள் இதழில் சிறுகதை, கவிதை, இலக்கியம், நாவல், நூல் விமர்சனம் என பல் வகைப் பிரிவுகளில் படைப்புகள் வெளிவந்துள்ளன. இதுவரை மண்ணின் குரல் (நாவல், கவிதை, கட்டுரைத் தொகுப்பு), எழுக அதி மானுடா! (கவிதைத் தொகுப்பு), அமெரிக்கா (நாவல், சிறுகதைகளின் தொகுப்பு), நல்லூர் ராஜதானி நகர அமைப்பு (ஆய்வு) மண்ணின் குரல் (நாவல்களின் தொகுப்பு), குடிவரவாளன் (நாவல்), அமெரிக்கா (நாவல், திருத்திய இரண்டாவது பதிப்பு) மற்றும் கட்டடக் கா(கூ)ட்டு முயல்கள் (சிறுகதைத் தொகுப்பு) ஆகிய நூல்கள் வெளியாகியுள்ளன.

நல்லூர் ராஜதானி நகர அமைப்பு ஆய்வு நூல் மற்றும் இவரது சிறுகதைகள் சிங்கள மொழிக்கு எழுத்தாளர் ஜி.ஜி.சரத் ஆனந்தவினால் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. அமெரிக்கா, குடிவரவாளன் ஆகிய நாவல்கள் லதா ராமகிருஷ்ணனால் ஆங்கிலத்துக்கு மொழிபெயர்க்கப்பட்டு வெளியாகியுள்ளன. இவரது படைப்புகள் பல அமேசன் - கிண்டில் தளத்தில் மின்னூல்களாகக் கிடைக்கின்றன.

எழுத்து மூலமும், பதிவுகள் மூலமும் தொடர்ந்து இலக்கிய சேவை செய்து வரும் வ.ந.கிரிதரனுக்கு 2022ம் ஆண்டுக்கான இலக்கிய சாதனை விருதை வழங்குவதில் தமிழ் இலக்கியத் தோட்டம் பெருமையடைகிறது.

## கனடிய தமிழ் இலக்கியத் தோட்டம் • இயல் விருது பெற்றோர்



**2001ம் ஆண்டு இயல் விருது**

கவிதைகள், நாவல்கள், சிறுகதைகள், கட்டுரைகள், விமர்சனங்கள் என்று கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக படைத்து தமிழ் இலக்கியத்தின் முன்னோடிகளில் ஒருவராக நின்று வழிநடத்தி தமிழ் பணியாற்றிய திரு சுந்தர ராமசாமி அவர்களுக்கு அவருடைய வாழ்நாள் தமிழ் இலக்கிய சேவையை பாராட்டி இந்த விருது வழங்கப்பட்டது.



**2002 ம் ஆண்டு இயல் விருது**

மணிக்கொடி பரம்பரையைச் சேர்ந்தவரும், மூத்த இலக்கியவாதியும், கடந்த அறுபது ஆண்டுகளுக்கு மேலாக தீவிர தமிழ் தொண்டாற்றி வந்தவருமான திரு கே. கணேஸ் அவர்களுக்கு அவருடைய வாழ்நாள் தமிழ் இலக்கிய சேவையை பாராட்டி இந்த விருது வழங்கப்பட்டது.



**2003ம் ஆண்டு இயல் விருது**

கடந்த நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக தமிழ் இலக்கியம், நாடகம், இசை சினிமா, சிற்பம், ஓவியம் ஆகிய பல துறை எழுத்துக்களில் தீவிரமாக இயங்கிவந்த திரு வெங்கட் சாமிநாதன் அவர்களுக்கு அவருடைய வாழ்நாள் தமிழ் இலக்கிய சேவையை பாராட்டி இந்த விருது வழங்கப்பட்டது.



**2004ம் ஆண்டு இயல் விருது**

ஈழத்து நூற்பதிப்பு துறையில் முன்னெப்பொழுதும் இல்லாத வகையில் கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேலாக தீவிரமாக இயங்கி தமிழுக்கு பெரும் தொண்டாற்றிவரும் திரு இ. பத்மநாப ஐயருக்கு அவருடைய வாழ்நாள் தமிழ் இலக்கிய சேவையை பாராட்டி இந்த விருது வழங்கப்பட்டது.



**2005ம் ஆண்டு இயல் விருது**

கடந்த பல ஆண்டுகளாக பழம் தமிழ் நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவரும், கலிஃபோர்னியா பல்கலைக்கழகத்தில் தமிழ்துறை தொடங்கி அதில் பேராசிரியராக பணியாற்றியவரும், 2004ல் தமிழ் செம்மொழியாக அறிவிக்கப்பட்டதற்கு காரணமானவருமான திரு ஜோர்ஜ் எல் ஹார்ட்டுக்கு அவருடைய வாழ்நாள் தமிழ் இலக்கிய சேவையை பாராட்டி இந்த விருது வழங்கப்பட்டது.



**2006ம் ஆண்டு இயல் விருது**

தமிழ் நாடகக் கலைக்காகப் பல ஆண்டுகள் பாடுபட்டு அதை உலக மட்டத்துக்கு உயர்த்தி , நாடகத்துக்கும், தமிழுக்கும், ஈழத்துக்கும் புகழ் சேர்த்துவரும் திரு தாசீசியஸ் அவர்களுக்கு அவருடைய வாழ்நாள் தமிழ் இலக்கிய சேவையை பாராட்டி இந்த விருது வழங்கப்பட்டது.



**2007ம் ஆண்டு இயல் விருது**

கடந்த இருபது ஆண்டுகளாக நவீன தமிழ் புனைகதைகள், கவிதைகள் ஆகியவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டு தமிழின் சிறப்பை உலகறியச் செய்துவரும் ***திருமதி லக்ஷ்மி ஹோம்ஸ்ரோம்*** அவர்களுக்கு அவருடைய வாழ்நாள் தமிழ் இலக்கியச் சேவையைப் பாராட்டி இந்த விருது வழங்கப்பட்டது.




**2008ம் ஆண்டு இயல் விருது**

கடந்த நாற்பது வருடங்களாக தமிழ் எழுத்துலகில் மட்டுமன்றி தன் செயல்பாட்டை பெண்கள் வாழ்க்கையின் பல்வேறு துறைகளுக்கும் விரித்து தன் பதிவுகளை இலக்கியத்துக்கும் அப்பால் கடத்திய அம்பை அவர்களுக்கு அவருடைய வாழ்நாள் தமிழ் இலக்கிய சேவையை பாராட்டி இந்த விருது வழங்கப்பட்டது.



**2009ம் ஆண்டு இயல் விருது**

கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக தீவிர சிந்தனையாளராகவும், கோட்பாட்டாளராகவும், திறனாய்வாளராகவும் இயங்கி, நவீன தமிழ் இலக்கியங்களை மார்க்ஸிய நோக்கில் ஆராய்ந்த கோவை ஞானி என்று அழைக்கப்படும் கி. பழனிச்சாமி அவர்களுக்கு அவருடைய வாழ்நாள் தமிழ் இலக்கிய சேவையை பாராட்டி இந்த விருது வழங்கப்பட்டது.



**2009ம் ஆண்டு இயல் விருது**

கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக தமிழ் எழுத்துக்களின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்து இவர் நடத்திய ஆராய்ச்சிகளுக்காகவும், தொல் தமிழ் குறித்து தீர்க்கமான முடிவுகளை எட்ட உதவியிருக்கும் கல்வெட்டு ஆராய்ச்சிகளுக்காகவும் திரு ஐராவதம் மகாதேவன் அவர்களுக்கு அவருடைய வாழ்நாள் தமிழ் இலக்கிய சேவையை பாராட்டி இந்த விருது வழங்கப்பட்டது.




**2010ம் ஆண்டு இயல் விருது**

கடந்த அறுபது ஆண்டுகளுக்கு மேலாக தமிழ் இலக்கியத்தின் பல துறைகளில் பங்களித்தவரும், மூத்த இலக்கியவாதியும், ஈழத்து தமிழ் இலக்கியத்தை உலகளாவிப் பரப்புவதில் முன்னிற்பவருமான திரு எஸ்.பொன்னுத்துரை அவர்களுக்கு அவருடைய வாழ்நாள் தமிழ் இலக்கிய சேவையை பாராட்டி இந்த விருது வழங்கப்பட்டது.




**2011ம் ஆண்டு இயல் விருது**

கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலாக பல இலக்கிய வகைப்பாடுகளில் இயங்கி, புனைவு இலக்கியத்தின் புதிய வாசல்களைத் திறந்து வாசகர்களுக்கு மகத்தான தரிசனங்களை அளித்தவரும், தமிழுக்கு தன்னை அர்ப்பணித்தவருமான திரு எஸ்.ராமகிருஷ்ணன் அவர்களுக்கு அவருடைய வாழ்நாள் தமிழ் இலக்கிய சேவையை பாராட்டி இந்த விருது வழங்கப்பட்டது.



**2012ம் ஆண்டு இயல் விருது**

கடந்த 35 ஆண்டுகளுக்கு மேலாக பல இலக்கிய வகைப்பாடுகளில் இயங்கி, புனைவு இலக்கியத்தின் புதியவாசல்களைத் திறந்து வாசகர்களுக்கு மகத்தான தரிசனங்களை அளித்தவரும், தமிழுக்கு தன்னை அர்ப்பணித்தவருமான திரு நாஞ்சில் நாடன் அவர்களுக்கு அவருடைய வாழ்நாள் தமிழ் இலக்கிய சேவையை பாராட்டி இந்த விருது வழங்கப்பட்டது.



**2013ம் ஆண்டு இயல் விருது**

கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாக சிறுகதைகள், கட்டுரைகள், சுயசரிதக் குறிப்புகள் என எழுதியதுடன் ‘‘மல்லிகை’’ என்னும் இலக்கியச் சிற்றிதழை அரைநூற்றாண்டு காலமாக தொடர்ந்து நடாத்தி சாதனை புரிந்திருக்கிறார் திரு. டொமினிக் ஜீவா. இவரது படைப்புகளும், பத்திரிகையும் அறிஞர்களதும் கல்வியா-ளர்களதும் தேடுதளமாக விளங்கி வருகின்றன. தமிழுக்கு தன்னை அர்ப்பணித்து இவர் ஆற்றிய வாழ்நாள் இலக்கிய சேவையை பாராட்டி இந்த விருது வழங்கப்பட்டது.



**2013ம் ஆண்டு இயல் விருது**

கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படும் விதமாக சுற்றுச்சூழல் பற்றியும், தமிழ் சினிமா வரலாறு பற்றியும் தமிழிலும், ஆங்கிலத்திலும் கட்டுரைகள் எழுதியதோடு முக்கியமான மொழிபெயர்ப்புகளும் செய்தவர் பல நூல்களை வெளியிட்டவர் என்ற வகையில் திரு தியோடர் பாஸ்கரன் அவர்களுக்கு அவருடைய வாழ்நாள் இலக்கிய சேவையை பாராட்டி இந்த விருது வழங்கப்பட்டது.




**2014ம் ஆண்டு இயல் விருது**

கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக திரு ஜெயமோகன் தமிழில் பல் துறைகளிலும் தனது எழுத்தின் மூலம் ஆழமான முத்திரையை பதித்திருக்கிறார். 80 நூல்களுக்கு மேல் வெளியிட்ட இவர் தொடர்ந்து நாடு நாடாக பயணம் செய்து இலக்கிய உரைகள் ஆற்றிவருகிறார். இவருடைய தமிழ் இலக்கிய சாதனைக்காக 2014ம் ஆண்டு இயல் விருது வழங்கப்பட்டது.



**2015ம் ஆண்டு இயல் விருது**

2003ம் ஆண்டிலேயே தமிழ் விக்கிப்பீடியா செயற்பாட்டில் பங்களிக்கத் தொடங்கினார் திரு இ. மயூரநாதன். இவர் தொடர்ந்து 13 வருடங்கள் அரும்பாடுபட்டு பங்களிப்பாளர் குழுமத்தை உருவாக்கி வெற்றியுடன் நடத்தினார். தமிழ் விக்கிப்பீடியாவை எதிர்காலத் தமிழ் மேம்படுத்தலுக்கான நம்பிக்கையாக வளர்த்தெடுத்த இவருடைய அளப்பரிய சாதனையை பாராட்டி 2015ம் ஆண்டு இயல் விருது இவருக்கு வழங்கப்பட்டது.



**2016ம் ஆண்டு இயல் விருது**

தமிழ் இலக்கிய உலகில் கடந்த 40 வருடங்களுக்கும் மேலாக, தனது இலக்கியப் பணிகளில் சமரசம் செய்து கொள்ளாமல் இயங்கிக் கொண்டிருக்கும் திரு. சுகுமாரனுக்கு, 2016-ஆம் ஆண்டுக்கான இயல் விருது வழங்கப்பட்டது.



**2017ம் ஆண்டு இயல் விருது**

கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலாக சிறுகதை, கவிதை, கட்டுரை, நாவல் என தொடர்ந்து இயங்கி வருபவரும், இலக்கியவாதிகளாலும், வாசகர்களாலும் பெரிதும் மதிக்கப்படுபவருமான வண்ணதாசன் அவர்களுக்கு, 2017-ஆம் ஆண்டுக்கான இயல் விருது வழங்கப்படுகிறது.




**2018ம் ஆண்டு இயல் விருது**

கடந்த 25 ஆண்டுகளுக்கும் மேலாக சிறுகதை, கட்டுரை, நாவல் என தொடர்ந்து இயங்கி வருபவரும், இலக்கியவாதிகளாலும், வாசகர்களாலும் பெரிதும் கொண்டாடப்படுபவருமான இமையம் அவர்களுக்கு, 2018-ஆம் ஆண்டுக்கான இயல் விருது வழங்கப்படுகிறது.



**2021ம் ஆண்டு இயல் விருது**

கடந்த நாற்பது ஆண்டுகளாக வரலாறு, மொழி, இலக்கியம், பண்பாடு, அரசியல், சமூகம் என பல்வேறு துறைகளில் ஆய்வு செய்தும், எழுதியும் வரும் பேராசிரியர் ஆ. இரா. வெங்கடாசலபதி அவர்களுக்கு 2021ம் ஆண்டுக்கான இயல் விருது வழங்கப்படுகிறது.



**2022ம் ஆண்டு இயல் விருது**

எண்பதுகளில் எழுதத் தொடங்கி இன்றுவரை தொடர்ந்து கவிதைகள், சிறுகதைகள், நாவல்கள், குறுநாவல்கள், கட்டுரைத் தொகுப்புகள், சிறுவர் இலக்கியம், மொழிபெயர்ப்புகள் என ஓயாது செயற்படும் பாவண்ணன் அவர்களுக்கு 2022ம் ஆண்டுக்கான இயல் விருது வழங்கப்படுகிறது.



**2022ம் ஆண்டு இயல் விருது**

கடந்த ஐம்பது ஆண்டுகளாக இலக்கியத்தில் அதி ஈடுபாட்டுடன் சிறுகதைகள், பயண இலக்கியங்கள், கட்டுரைத் தொகுதிகள், நேர்காணல்கள் என இயங்கிவரும் படைப்பிலக்கியவாதியும், ஊடகவியலாளருமான லெ. முருகபூபதி அவர்களுக்கு 2022ம் ஆண்டுக்கான இயல் விருது வழங்கப்படுகிறது.

# 2021ம் ஆண்டு விருதாளர்கள்.

(கோவிட் பெரும் தொற்றுக் காரணமாக 2019, 2020 இற்கான இயல் விருது நிகழ்வுகள் இடம்பெறவில்லை. மீண்டும் 2021ம் ஆண்டுக்கான இயல் விருது நிகழ்வு ஜுன் 11, 2022 இணைய மெய்நிகர் வழி நடாத்தப்பட்டது.)



**Lifetime Achievement Award**
Professor A.R.Venkatachalapathi
**இயல் விருது**
**பேராசிரியர் ஆ.இரா.வேங்கடாசலபதி**



**Fiction award**
P.A.Jayakaran
புனைவு விருது
**பா. அ. ஜயகரன்**
பா.அ.ஜயகரன் கதைகள்



**Non-fiction award**
K.Chandru
அபுனைவு விருது
**கே.சந்துரு**
நானும் நீதிபதி ஆனேன்



**Poetry Award**
Aazhiyaal
கவிதை விருது
**ஆழியாள்**
நெடுமரங்களாய் வாழ்தல்



**Translation Award**
Martha Ann Selby
மொழிபெயர்ப்பு விருது
**மார்த்தா ஆன் செல்பி**
Cat in the Agraharam and other stories

## SPONSORS

### Advertisements

Dr. Sukanthy Bream and associates
Stirling Pharmasave – Udhayakumari Arul
HomeLife/GTA Realty Inc – Raja Mahendran
Promar Ltd – Vivek Subramaniam
Dr. Shan A. Shanmugavadivel & Associates
Yarlmetal Fabrications Inc – Vyramuthu Sornalingam , C.E.O

### Donations

Vaithehi, Balamurugan and Apsara
Mrs. Sathiajothi Selvakone
Dr. Vijay Janakiraman
Manuel Jesudasan
Appadurai Muttulingam
Dr.M.A.Sanjayan
Bairavee Ranjith/ Sanjeevan
Dr. Thushiyanthy and Dr. S. Sriharan
Margie and Vincent de Paul
Thirumurthi Ranganathan
Lakshman Dhasarathan
Venkata Subramanian Jayaraman
Kishanthan Nithyanandan
Dr. S. Sambandam
Dr. V. Raghuraman

தமிழ் இலக்கியத் தோட்டம்
Tamil Literary Garden

*With the Best Compliments Of*

HomeLife HIGHER STANDARDS

## HomeLife/GTA Realty Inc.

Brokerage



**Tel: 416 321 6969**
**Tel: 905 712 2666**

**5215, Finch Ave. E, Suite #203, Scarborough**
**145 Traders blvd. Suite #28, Mississauga**

Raja Mahendran, P.Eng
**Broker/ Owner**

# Dr. Shan A. Shanmugavadivel & Associates

• Orthodontics • Implants • Cerec Crowns

## டாக்டர் அ. சண்முகவடிவேல்

பற்களை ஒழுங்கு செய்தல், இம்பிளான்ற் சிகிச்சை,
ஆகியவற்றில் பல வருட அனுபவமுள்ள
குடும்ப பல் வைத்தியர்.

## RAINBOW VILLAGE DENTAL OFFICE

**2466 Eglinton Avenue East, Unit 7**
**Scarborough, ON. M1K 5J8**
**Monday to Saturday**
**Near Kennedy Subway**
**Tel 416 266 5161**

*With the Best Compliments Of*

## Yarlmetal Fabrications Inc



Vyramuthu Sornalingam, C.E.O

221, Finchdene Square, Scarborough, Ontario M1B 3V1

Tel: 416 297 9013
Fax: 416 297 9513

உங்களுக்குத் தெரியும்,
நம்பிக்கையுடனான தரமான சேவைகள்..
தகுதியான வெற்றிகளுக்கான
தரமான தெரிவு

On high, with your thoughts



PROMAR Ltd.
AWARDS & PROMOTIONS
நகரின் முன்னணித் தமிழர் நிறுவனம்

இப்பொழுது
வீடு விற்பனைத்
துறையிலும்

www.promarawards.com 416-291 2344

585 Middlefield Rd Unit # 3, Scarborough, ON., M1V 4Y5